# பேசி வளர்ந்த இயக்கம் என்றும் பேசிக்கொண்டே இருக்கும்!

பேச்சுக் கலை என்பது அரியதோர் கலை. கற்றோர், கல்லாதோர் என்ற பாகுபாடின்றி அனைத்துத் தரப்பினரையும் கவர வல்ல வசீகரமான அற்புதக் கலை. பொதுவாக ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும், தனி மனித முன்னேற்றத்துக்கும் பேச்சுக் கலை என்பது இன்றியமையாத ஒன்று. குறிப்பாக, மக்களாட்சி மலர்ந்துள்ள நாடுகளில் இன்றும் பேச்சுக் கலை இன்றியமையாத ஒன்றாக இருந்து வருவதை யாவரும் அறியலாம்.

அரசியல் சீர்திருத்தம், சமயச் சீர்திருத்தம், சமுதாயச் சீர்திருத்தம், தொழிலாளர் முன்னேற்றம், தேர்தலில் வெற்றி பெறுதல் ஆகியவற்றிற்கு எல்லாம் அவசியம் தேவைப்படுகின்ற கலைதான் பேச்சுக் கலை.

ஒவ்வொரு அரசியல் கட்சியும் தலைசிறந்த பேச்சாளர்களைக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாத தேவையாகும். அவ்வாறான பேச்சாளர்களை ஒரு கட்சி பெற்றிருக்கவில்லையென்றால், அக்கட்சியின் பயணம் காகிதக் கப்பலின் பயணம் போலவே முடியும். அரசியல் கட்சியில் இணைத்துக் கொண்டு தொண்டு புரிய விரும்புவோர் பேச்சுக் கலையைக் கற்றுத் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு கற்று வளர்த்துக் கொண்டால்தான், அவர் அக்கட்சியிலும் மக்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றவராக வளர முடியும்.

இதனை நன்கு உணர்ந்து, பேசி வளர்ந்த இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம்! இவ்வியக்கம் இனியும் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறை இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தற்போது முன்னெடுத்திருக்கும் மாபெரும் முயற்சிதான் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு “என் உயிரினும் மேலான” பேச்சுப் போட்டி.

கிரேக்க நாட்டில் கி.மு. நான்காம் நூற்றாண்டில், அதாவது 2,400 ஆண்டுகளுக்கு முன்பே டெமஸ்தனிஸ் போன்று நாவண்மை கொண்ட பேச்சாளர்கள் பலர் இருந்து வந்ததையும், அத்தகையோர் பல வெற்றிகளைப் பெற்றதையும் கிரேக்க நாட்டு வரலாறு, பதிவு செய்துள்ளது. அது போல, பண்டைய ரோமில் மார்க்ஸ் டல்வியஸ் சிசிரோ உள்ளிட்ட பல பேச்சாளர்கள் இருந்து வந்துள்ளனர்.

பண்டைத் தமிழ்நாட்டிலும் பேச்சுக் கலை இருந்ததை தமிழர் நாகரிகம் மற்றும் வரலாற்றுக் கூறுகளின் மூலம் நாம் அறிகிறோம். ஆனால், அது இன்றுள்ள பேச்சுக்கலை முறையில் அல்ல; பாட்டுரை விளக்கமாகவும், சமயவாத பேச்சுகளாகவும்; அறவுரை, உபதேசம் வழங்குவதாகவும் இருந்தன. கி.பி.18-ஆம் நூற்றாண்டில் கீர்த்தனைகள், கதாகாலட்சேபங்கள், பிரசங்கம் போன்றவை தமிழ்நாட்டில் நடைபெற்று வந்தன. ஆனால், இதில் இசையே பிரதானம் வகித்தது. பேச்சுகளுக்கு இடையே, இசை மக்களுக்கு இன்பம் தந்தது. 20-ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில்தான் இவை மறைந்து, தமிழ்நாட்டில் மேடைப்பேச்சுக் கலை தோன்றியது.

மேடைப் பேச்சுக்கலையை தமிழகத்தில் உருவாக்கியவர் தமிழ் தென்றல் திரு.வி.க. இவர் மேடைப் பேச்சு கலைக்கு தந்தை என அறியப்பட்டார். திராவிட இயக்கங்கள் தோன்றிய பிறகுதான் மேடைப்பேச்சு என்பது ஒரு இயக்கமாக மாறியது. மக்கள் பிரச்சினை, அரசியல் விழிப்புணர்வு, சமுதாயச் சீர்திருத்தம் எனப் பாமர மக்களை ஈர்க்கும் வகையில் திராவிட இயக்கத்தின் பேச்சுக் கலை அமைந்தது. மேடைத் தமிழுக்கு ஆடை கட்டி அழகு பார்த்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். உலக வரலாற்றில் ஒரு இயக்கத்தினுடைய வெற்றியை, சுக துக்கத்தைத் தீர்மானித்தது மேடைப் பேச்சென்றால், அந்தப் பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும்தான் உண்டு.

திராவிட முன்னேற்றக் கழகம் சொற்பொழிவாளர்களின் சொர்க்கலோகம். இருண்டு கிடந்த மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்கும் கழகத்தை ஆட்சியில் அமர வைப்பதற்கும் பேரறிஞர் அண்ணா ஆயுதம் ஏந்தவில்லை, மேடையைத்தான் நம்பினார். அதனால் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மண்ணை விட்டு மறைந்த பொழுது, “மேடைகளே புலம்புங்கள்; மின்னும் சரிகை சொல்லாபரணங்களால் உன்னை அலங்கரித்தவன் போய்விட்டான்; மேடைகளே புலம்புங்கள்!!” என அன்று கவிக்கோ அப்துல் ரகுமான் இரங்கல் வடித்தார்.

பேரறிஞர் அண்ணாவின் அணிவகுப்பில் முத்தமிழறிஞர் கலைஞர், நடமாடும் பல்கலைக்கழகம் நாவலர் நெடுஞ்செழியன், தத்துவமேதை டி.கே.சீனிவாசன், சிந்தனை சிற்பி சிற்றரசு, நாவுக்கரசர் நாஞ்சில் மனோகரன், பெரும் பேச்சாளர் என அறியப்பட்ட கே.ஏ. மதியழகன் என நாட்டை அதிரவைத்த, நாட்டு மக்களின் உணர்ச்சியைத் தூண்டிய சொற்பொழிவாளர்களைக் கொண்டிருந்த இயக்கம்தான் தி.மு.க.

இன்றைக்கு சமூக ஊடகங்களுடைய தாக்கத்தினாலும், உலகமயமாக்கலாலும் மேடைப் பேச்சு பண்பாட்டிற்கு ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தேக்கத்தைச் சரிகட்ட யார் முன்வருவது? இதையும் தி.மு.க.தான் செய்யும். இதோ நம்முடைய கண்ணுக்கு நம்பிக்கையாகத் தெரிகிறார், தி.மு.க. இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின்.

தி.மு.க. இளைஞரணிச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, தலைவர் - முதல்வர் அவர்கள் ஒரு கோடி உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என்ற போது, அந்தக் கட்டளையைக் கடமை தவறாத தளகர்த்தராகச் செயல்பட்டு நிறைவேற்றிக் காட்டினார் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின்.

நீட் அக்கிரமத்துக்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற ஒன்றிய அரசு முன்வரவில்லை. ஆனால், அதை மக்கள்



இயக்கமாக மாற்ற வேண்டும் என முடிவெடுத்து, நீட் தேர்வை ரத்து செய்யக் கோரும் கையெழுத்து இயக்கத்தை நடத்தி, ஒரு கோடி கையெழுத்துக்களைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்தார் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின்.

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் போர் வாளான, தி.மு.க.வின் மூச்சொலியான, கலைஞரின் தலைப்பிள்ளையான முரசொலி நாளிதழின் கடைசிப் பக்கம் “பாசறைப் பக்கமாக” இன்றைக்கு மலர்ந்து வருகிறது. தி.மு.க.விற்கு கண்ணீரும், சென்னீரும் தந்தவர்கள், கழகத்திற்காக அடக்குமுறைகளை, ஆபத்துகளை எதிர்கொண்டவர்களின் வரலாறை இன்றைய இளைய தலைமுறை பாசறைப் பக்கத்தின் வழியாகத் தெரிந்து கொள்ள வழிவகை செய்தவர் நம் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின்.**

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரைத் தொடர்ந்து, கழகத் தலைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வருமான தளபதி அவர்கள் தி.மு.க. இளைஞரணிச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் எண்ணிலடங்காப் பாசறைக் கூட்டங்களை நடத்தி, இவ்வியக்கத்திற்கு அடுத்தடுத்த தலைமுறைகள் தொடர்ந்து கிடைப்பதற்குப் பெரும் பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞரணிச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே, 250 பாசறைக் கூட்டங்களைச் சட்டமன்றத் தொகுதி வாரியாக நடத்தி, கழகத்திற்குப் புதிய ரத்தத்தைப் பாய்ச்சியிருக்கிறார்.


**திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வலுவும், பொலிவும் சேர்க்க, தி.மு.க. இளைய தலைமுறையின் நெஞ்சில் பதியம் போட அவர் எடுத்த ஆயுதம்தான் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு “என் உயிரினும் மேலான” பேச்சுப் போட்டி.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தி.மு.க. இளைஞர் அணி நடத்திய “என் உயிரினும் மேலான” பேச்சுப் போட்டியில் 17,000 இளம் பேச்சாளர்கள் ஆர்வத்துடனும் கொள்கைத் துடிப்புடனும் கலந்து கொண்டார்கள் என்பது இன்று ஆச்சரியம் கொள்ளத்தக்க உண்மை. முதல் கட்டமாக மாவட்ட அளவில் நடந்த இப்பேச்சுப் போட்டியில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் மண்டல அளவில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு ஏற்ப அவர்களுக்கு திராவிட இயக்கப் பேச்சாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. மண்டல அளவில் நடந்த பேச்சுப் போட்டியில் 183 பேர் தேர்வு செய்யப்பட்டு, இவர்கள் அக்டோபர் 26, 2024 அன்று நடைபெறவுள்ள மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர். இறுதிப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு அக்டோபர் 27, 2024 அன்று நடைபெறும் விழாவில் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான தளபதி அவர்கள் பரிசுகளை வழங்கவிருக்கிறார்.**

கட்சி அரசியலின் எல்லையைத் தாண்டி, திராவிட இலட்சியம் கொண்ட இளைஞர்களைத் தயார் செய்வதற்கும், வருங்காலத் தேவைகளுக்கு ஏற்ப தகுதிமிக்க பேச்சாளர்களை உருவாக்குவதற்கும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டியை வெற்றிகரமாக நடத்திக் காட்டியிருக்கிறார் நம் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின்.

தமிழ்நாட்டு மக்களுக்கு, இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைப் பள்ளிக்கூடங்களும், பல்கலைக்கழகங்களும் கற்றுத் தரவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேடைகளே கற்றுத் தந்தன.

தி.மு.க.வின் மேடைகளை மாலை நேரத்துப் பல்கலைக்கழகம் என்றார் பேரறிஞர் அண்ணா. அப்பல்கலைக்கழகத்தை மென்மேலும் வலுப்படுத்தும் பாதையை இன்றைய நவீன தகவல் தொடர்பு யுகத்துக்கு ஏற்பக் கட்டமைத்து வருகிறார், நம் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின். அதனாலேயே அவர் தி.மு.கழக இயக்க வரலாற்றில் இடம் பிடிக்கிறார்.



வழக்கறிஞர்
**இ. பரந்தாமன்,** எம்.எல்.ஏ.
இணைச் செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை.

---

## சாலை விபத்தில் உயிரிழந்த – வீரவநல்லூர்

# காவல் நிலைய உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 26 -

சாலை விபத்தில் உயிரிழந்த திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் ரூ.25 லட்சம் நிதியுதவி குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்துவந்த சுப்பையா (வயது 57) என்பவர் கடந்த 21.10.2024 அன்று பணி முடிந்து இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக தவறி விழுந்து காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று (25.10.2024) உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

காவல் உதவி ஆய்வாளர் சுப்பையா அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல் துறைக்கும் அவரது குடும்பத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

காவல் உதவி ஆய்வாளர் சுப்பையா அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல்துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### சுற்றுலாத் துறை சார்பாக

# தமிழகத்தை கண்டு மகிழ்வோம்! சமூக ஊடகவியலாளர்கள் சுற்றுலா!

## பயணப் பேருந்தை டாக்டர் சந்திரமோகன் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக். 26-

தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பாக “தமிழகத்தை கண்டு மகிழ்வோம் - 2024 (Discover Tamil Nadu-2024)” என்ற சமூக ஊடகவியலாளர்களின் சுற்றுலா பயணத்தையொட்டி, அரசு முதன்மைச் செயலாளர் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் தலைவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர்.சந்திரமோகன்.பி சுற்றுலா பேருந்தை கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களின் சிறப்புகளை வெளிநாட்டு மற்றும் பிற மாநில சுற்றுலா பயணிகள் அறிந்து கொள்ளவும் தமிழ் நாட்டு சுற்றுலா தலங்களை பார்வையிட ஊக்குவிக்கவும், வெளிமாநிலங்களில் அதிக அளவில் பார்வையாளர்களை கொண்ட சமூக வலைதள ஊடகவியலாளர்களை தமிழ் நாட்டில் உள்ள சுற்றுலாத்தலங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பேருந்து மூலம் சுற்றுலா அழைத்து செல்ல சுற்றுலாதுறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று (25.10.2024) சென்னை தீவுத்திடல் டிரைவ் இன் ஓட்டல் வளாகத்தில் “தமிழகத்தை கண்டு மகிழ்வோம் - 2024 (Discover Tamil Nadu-2024)” என்ற சமூக ஊடகவியளாளர்கள் சுற்றுலா பயண தொடக்க நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தலைவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர்.சந்திரமோகன்.பி, சமூக ஊடகவியலாளர்களின் சுற்றுலா பேருந்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி. சமயமூர்த்தி, முன்னிலை வகித்தார்.

இதனைத்தொடர்ந்து தமிழ் நாட்டின் சுற்றுலாத்தலங்களின் சிறப்புகள் குறித்து தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சமூக ஊடக வலைதளங்களான யூ டியூப், பேஸ்புக், எக்ஸ் (டிவிட்டர்), இன்ஸ்டாகிராம் உள்ளிட்டவற்றில் புகைப்பட ங்கள், வீடியோக்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலாத்துறை பேஸ்புக் பக்கத்தை 1,82,000 நபர்களும், இன்ஸ்டாகிராம் பக்கத்தை 1,69,000 நபர்களும், எக்ஸ் பக்கத்தை 80,900 நபர்களும், யூ டியூப் -ஐ 13,900 நபர்களும் பின்தொடர்ந்து சுற்றுலாத்தலங்கள், விழாக்கள், திருவிழாக்கள் குறித்த தகவல்களை அறிந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2022 ல் 21.89 கோடி ஆக இருந்து 2023 ல் 28.71 கோடி ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2024 ல் ஆகஸ்ட் மாதம் வரை 8 மாத காலத்தில் 20.69கோடி என உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களின் சிறப்புகளை வெளிமாநிலத்தவர்கள் அதிக அளவில் தெரிந்து கொள்ள ஏதுவாக வெளிமாநிலங்களில் உள்ள அதிக அளவில் பார்வையாளர்களை கொண்ட சமூக வலைதள ஊடகவியலாளர்கள் இன்றைய தினம் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாலத்தல ங்களுக்கு பேருந்து மூலம் சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் மாமல்லபுரம், தஞ்சாவூர், தாராசுரம், காரைக்குடி செட்டிநாடு, ராமேஸ்வரம், தனுஷ்கோடி, கீழடி, மதுரை மீனாட்சி அம்மன் கோவில், ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலாத்தலங்களும், கோவில்களுக்கும் சென்று பார்வையிட்டு புகைப்படம் மற்றும் வீடியோகளை அவர்களது சமூக வலைதள பக்கங்களில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்தியா முழுவதும் மற்றும் வெளிநாடுகளிலும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை மேலும் அதிகமாகும். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொதுமேலாளர் திருமதி. எஸ்.கவிதா அவர்கள் உள்பட சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

குறிப்பு: கர்நாடக மாநிலம் மங்களூர் சேர்ந்த மஹம்மத் ஹாரிஸ். ந சமூக ஊடகவியலாளர் (4.85 லட்சம் பின்தொடர்பவர்கள்), மும்பை சேர்ந்த அஜய் ஷர்மா மற்றும் தான்வி விஜய் பாட் டீல் தம்பதியனர் (3.07 லட்சம் பின்தொடர்பவர்கள்), கேரள மாநிலம் சேர்ந்த திரு.அபிதீப் பிரதீப் (2.69 லட்சம் பின்தொடர்பவர்கள்), ஸ்ரீநகரை சேர்ந்த பெண் சமூக ஊடகவியலாளர் நர்கிஸ் பர்ஹீ பஷீர் (2.83 லட்சம் பின்தொடர்பவர்கள்), கோவாவை சேர்ந்த சமூக ஊடகவியலாளர் டான்வீர் ஸஹபிர் தேசாய் (1.80 லட்சம் பின்தொடர்பவர்கள்), கொல்கத்தாவை சேர்ந்த பெண் சமூக ஊடகவியலாளர்கள் அண்டாரா பகாரியா & அமரா பலி பகாரியா (1.75 லட்சம் பின்தொடர்பவர்கள்), கேரளாவைச் சேர்ந்த பெண் சமூக ஊடகவியலாளர் கோபிகா உன்னிகிரிஷ்ணன் (1.05 லட்சம் பின்தொடர்பவர்கள்), கேரளாவைச் சேர்ந்த திரு. ஷைக் ஹாசன் காண் சமூக ஊடகவியலாளர் (88 ஆயிரம் பின்தொடர்பவர்கள்), பிரான்ஸ் நாட்டை சேர்ந்த சமூக ஊடகவியலாளர்கள் அனாய்ஸ் நோசட் தம்பதியனர் (2.02 லட்சம் பின்தொடர்பவர்கள்) ஆகிய 9 சமூக ஊடகவியலாளர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** தம்பி....! ஒன்றிய பா.ஜ.க. அரசின் அமலாக்கத்துறை வைத்திலிங்கத்தின் மீதும், எடப்பாடியின் நண்பர் இளங்கோவன் மீதும் பாய்ந்திருக்கிறதே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா, பா.ஜ.க.வுக்குப் புதிய கூட்டாளிகளைச் சேர்ப்பதில் அமலாக்கத்துறை இறங்கி இருக்கிறதோ என்ற அய்யப்பாடு சிலருக்கு ஏற்பட்டுள்ளது.**

**இடிக்க வேண்டியதை இடித்தால், நடக்க நினைப்பது நடக்கும் என்ற நம்பிக்கையோ என்னவோ ?**

---

## தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட, மாநில, மாநகர, அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநில, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 9.11.2024 - சனிக்கிழமை, காலை 9.00 மணியளவில், கரூர், கோவை ரோடு, டான்சி அருகில் உள்ள “பிரேம் மகாலில்” எனது தலைமையில்,

கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும் - மின்துறை அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி மற்றும் மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி - இணைச் செயலாளர்கள் சி.ஜெரால்டு, எஸ்.மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

அதுபோது மாவட்ட, மாநில, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1) துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள்;

2) “தமிழ் மாணவர் மன்ற” - அமைப்பினை ஏற்படுத்தி, அதில் உறுப்பினராக சேர்த்த படிவங்களை ஒப்படைத்தல் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.10.2024

**சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



முதலமைச்சர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மதுரவாயல் தெற்கு பகுதி, வளசரவாக்கம் 152வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் 152வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.பாரதி அண்ணாவேலவன் ஏற்பாட்டில் காரம்பாக்கத்தில் உள்ள தெற்கு பகுதி கழக அலுவலகத்தில் வட்டக் கழக அவைத்தலைவர் ஜெ.பாஸ்கர் தலைமையிலும் எஸ்.பி.ஜி.பிரபு, கா.பாண்டீஸ்வரி ஆகியோர் முன்னிலையிலும் இரா.கோதண்டன் வரவேற்புரையில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் ச.அருணாச்சலம், இரா.பால்பாண்டியன், கே.நாராயணன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் சி.நல்லதம்பி, கெ.மன்மத ராஜ், வி.திலகவதி, இ.அண்ணாவேலவன், ஆர்.வி.கே.தமிழ்மாறன், பழ.அ.இராமு, து.சத்தியசீலன், மு.ஆல்பர்ட், வ.அற்புதநாதன் இரா. ராஜேஷ், ச.பிரேமா, உ.பூங்கொடி கு.விஜயகுமார், . ஆர்.ராஜ்குமார், கே.நரசையா, எஸ்..சரவணன், து.வெங்கடேசன், ம.கிரி, டி.இராச்சந்திரன் அ.சூர்யா, ம.தீனத்குமார், எஸ்.தினேஷ், எஸ்.கார்த்திகேயன், மா.சசிக்குமார், ப.பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர் ஜீ.ஜான்பீட்டர் நன்றி கூறினார்.